# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600-032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். 208/ந/2018
நாள் : 21/06/2019

திரு G செந்தில் குமார்,
போடி நாயக்கனூர். – **முறையீட்டு மனுதாரர்**

நகராட்சி ஆணையர்/
அலுவலர்கள்,
போடிநாயக்கனூர் நகராட்சி,
போடிநாயக்கனூர். – **எதிர் மனுதாரர்கள்**

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர், நந்தவனம் இரண்டாவது தெரு, 27/15 கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு G செந்தில் குமார் அவர்களின் 22.09.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 208/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனு சம்பந்தமாக மனுதாரர் மற்றும் நகராட்சி அலுவலர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர், நந்தவனம் இரண்டாவது தெரு, 27/15 கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு G செந்தில் குமார் என்பவர் போடி நாயக்கனூர் நகராட்சி 23–வது வார்டு, பிள்ளையார் கோவில் தெரு, நகரளவை எண்.146–அரசு புறம்போக்கு நிலத்தினை ஆக்கிரமிப்பு செய்தது சம்பந்தமாக நகராட்சி நிர்வாகம் மேற்கொண்ட கீழ்க்காணும் நடவடிக்கைகளைக் குறிப்பிட்டு உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார் :-

(1) அரசு புறம்போக்கு நிலத்தினை ஆக்கிரமிப்பு செய்து, அந்நிலத்தில் கட்டப்பட்ட வணிக வளாகக் கட்டடங்களை அகற்ற நகராட்சி தவறியது;

(2) அரசு புறம்போக்கு நிலத்தில் இருந்த வழிபாட்டுத் தலங்கள் அகற்றப்பட்டபின் மேற்படி புறம்போக்கு நிலங்களுக்கு காலிமனை வரி விதித்தது ;

(3) ஆக்கிரமிப்பாளர்கள் பெயரில் சொத்துவரி மற்றும் காலிமனை வரி விதித்தது.

2. மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் குறித்து முறையீட்டு மனுதாரரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. போடி நாயக்கனூர் நகராட்சி, 23–வது வார்டு பிள்ளையார் கோவில் தெரு, நகரளவை எண்.146–இல் உள்ள நிலம் அரசு புறம்போக்கு நிலம் என்றும் அந்நிலத்தினை தேவாங்கர் செட்டியார் இனத்தைச் சேர்ந்தவர்கள் ஆக்கிரமிப்பு செய்து வணிக வளாகம் கட்டி உள்ளார்கள் என்று தெரிவித்தார். வணிக வளாகக் கட்டடம் தனது நிலத்திலும் ஆக்கிரமிப்பு செய்து கட்டப் பட்டுள்ளதென்றும், தன்னுடைய நிலத்தில் கட்டப்பட்ட கட்டடத்திற்கும் சேர்த்து சொத்துவரி ஆக்கிரமிப்பாளர் பெயரில் தாக்கலாகி உள்ளதுடன் காலிமனை வரியும் விதிக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

3. போடிநாயக்கனூர் நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் மற்றும் நகர நில அளவையர் ஆகியோரிடமும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. மேற்குறிப்பிட்ட நகராட்சியில், 146 நகரளவை எண்ணுள்ள நிலம் சர்க்கார் புறம்போக்கு, சவுடம்மன் கோவில் என நகரளவை பதிவேட்டில் பதிவாகி உள்ளதென்றும், இந்நிலத்தின் பரப்பு 208.5 சதுர மீட்டர் என்று விசாரணையின் போது தெரிவித்தனர். சவுடம்மன் கோவில் நிலத்தில் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள கட்டடம் சம்பந்தமாக தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், பிரிவு 216 (1) (2)–இன் கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளதென்றும் தெரிவிக்கப்பட்டது. கோவில் நிர்வாகத்தினால் வணிக வளாகம் கட்டப்பட்டுள்ளது என்பதை உறுதி செய்தனர். மேற்குறிப்பிட்ட கோவில் நிலத்தை அளப்பதற்கு தேவாங்கர் சமூகத்தை சார்ந்த நபர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர் என்றும், இந்நிலம் சம்பந்தமாக வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதென்றும் தெரிவித்தனர்.

4. நகராட்சி ஆணையர் தனது அறிக்கையில், நகரளவை எண்.146 உள்ள நிலம் சவுடம்மன் கோவிலுக்கு சொந்தமானதால், அந்நிலத்தில் ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் பொதுமக்களுக்கோ அல்லது பொதுப்பயன்பாட்டிற்கோ தடையாக இல்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதென தெரிவிக்கப்பட்ட புகார் ஏற்கக் கூடியதல்ல என கோட்டாட்சியர் ஆணையினை உறுதி செய்து முறையீட்டு மனுதாரர் தாக்கல் செய்த சீராய்வு மனுவில் ஆணையிடப்பட்டுள்ளதென்று தெரிவித்துள்ளார். மேலும், இந்த இடம் சவுடம்மன் கோவிலுக்கு சொந்தமானது என்பதால் காலிமனை வரி மற்றும் சொத்துவரி விதிக்கப்பட்டுள்ளதென்றும் நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

5. முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகள் குறித்து மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் விசாரணையின் போது அளித்துள்ள வாக்குமூலங்கள் மற்றும் நகராட்சி ஆணையரின் அறிக்கை நன்கு பரிசீலிக்கப்பட்டன. தேனி மாவட்டம், போடி நாயக்கனூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5, பிளாக் எண்.3, புல எண்.146–இல் 0.208.5 சதுர மீட்டர் நிலம் வருவாய் ஆவணங்களில் சர்க்கார் புறம்போக்கு என்று வகைப்படுத்தப்பட்டு சவுடம்மன் கோவில் பெயரில் தாக்கலாகி உள்ளது. மேற்குறிப்பிட்ட புல எண். 146 உள்ள நிலத்திற்கு மேற்கே முறையீட்டு மனுதாரரின் குடும்பத்தாருக்கு சொந்தமான புல எண்.145/5 உள்ளது. சவுடம்மன் கோவில் அமைந்துள்ள 146 புல எண்ணுள்ள அரசு புறம்போக்கு நிலம் போடிநாயக்கனூர் தாய், ஸ்தலம், தேவாங்கர் சாதி பொதுமையினரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட அரசு புறம்போக்கு நிலம் மற்றும் அதில் உள்ள கோவிலை நிர்வகித்து வரும் தாய் ஸ்தலம் தேவாங்கர் சாதியினர் கோவில் நிலத்தில் கடைகளை கட்டும்பொழுது முறையீட்டு மனுதாரரின் குடும்பத்திற்குச் சொந்தமான புல எண்.145/5–இல் பகுதி நிலத்தினையும் ஆக்கிரமித்து நான்கு கடைகளை கட்டியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கட்டப்பட்டுள்ள மேற்படி கடைகளுக்கு 2012–ஆம் ஆண்டு முதலாம் அரையாண்டிலிருந்தே சொத்துவரி விதிக்கப்பட்டுள்ளது. மேலும், 2004–2005–ஆம் ஆண்டு முதலாம் அரையாண்டிலிருந்து காலிமனை வரியும் விதிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட கடைகளுக்கான சொத்துவரி மற்றும் காலி மனை வரி சவுடம்மன் கோவில் அல்லது இந்து அறநிலையத் துறை பெயரில் தாக்கல் செய்யாமல் தாய் ஸ்தலம் தேவாங்கர் ஜாதிப் பொதுமை என்ற பெயரிலேயே தாக்கலாகி உள்ளன. எனவே, தனது நிலத்தில் ஒரு பகுதியினை ஆக்கிரமித்து அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள கடைகளை அகற்றவும் ஆக்கிரமிப்புதாரர்கள் தாய் ஸ்தலம் தேவாங்கர் ஜாதிப் பொதுமை பெயரில் தாக்கலாகி உள்ள சொத்துவரி மற்றும் காலிமனை வரியினை இரத்து செய்ய வேண்டுமென்பதே முறையீட்டு மனுதாரரின் முதன்மையான கோரிக்கைகளாகும்.

6. அரசு புறம்போக்கு கோவில் நிலத்தில் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள கடைகளை இடித்து அப்புறப்படுத்தக்கோரி 1920–ஆம் ஆண்டு திருத்தப்பட்ட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், பிரிவு 199 மற்றும் 216 (1) (2) மற்றும் 317–இன் கீழ் 15.10.2015 நாளிட்ட 42/2015/F1 அறிவிப்பு தலைவர்/ செயலர், சவுடம்மன் கோவில் தெற்குரத வீதி என்ற முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட அறிவிப்பு அக்கோவிலை நிர்வகித்து வரும் தாய் ஸ்தலம் தேவாங்கர் ஜாதிப் பொதுமை என்ற முகவரிக்கு அனுப்பப்பட்டதாகத் தெரியவில்லை. மேற்குறிப்பிட்ட அறிவிப்பு வழங்கியபின் கட்டட அனுமதியின்றி கட்டடம் கட்டப்பட்டு சொத்துவரி விதிக்கப்பட்டிருந்த 769 சதுர அடி பரப்பிலான கட்டடத்திற்கு கட்டட அனுமதி வேண்டி 227/2016 எண்ணிட்ட கட்டட அனுமதி விண்ணப்ப மனுவினை தாய் ஸ்தலம் தேவாங்கர் ஜாதிப் பொதுவுடமையினர் 14.12.2016 அன்று நகராட்சிக்கு சமர்ப்பித்துள்ளனர். மேற்குறிப்பிட்ட விண்ணப்ப மனுவினை பரிசீலித்த நகராட்சி

ஆணையர் கட்டட அனுமதி கோரும் இடம் மனுதாரருக்கு சொந்தமானது என்பதற்கான கிரையப் பத்திர ஆவணங்களோ அல்லது பட்டா சிட்டா ஆவண நகல்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், மேலும் சில கட்டட விதிகளை பின்பற்றப்படவில்லை எனக் குறிப்பிட்டும்- 28.12.2016 நாளிட்ட ஆணையில் கட்டட விண்ணப்பத்தினை தள்ளுபடிசெய்து ஆணையிட்டுள்ளார்.

7. நிலம் ஆக்கிரமிப்பு மற்றும் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் குறித்து தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் சென்னை மாண்பமை உயர்நீதிமன்றத்தால் கீழ்க்காணும் கருத்துரைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

> "Land encroachments are like Cancer. It slowly eats the lung space of the land and definitely, there will be no breathing space for anyone, much less the Earth, to survive in the Orbit "
>
> " If there is no building plan, deviation of any, have got to be removed by the petitioner. If not, the authorities are entitled to remove the same in accordance with law, recovering the demolition costs from the petitioner "
>
> "...... this court is of the view that unless there is a stay of the proceedings by the High Court, quoting any pedency of the matter, the officials of the Municipality / Corporation/ CMDA and Government Officials cannot close the complaints or appeals, etc., on the ground of pendency of Writ Petition or Writ Appeal. It they do so, it would amount to dereliction of duty and they could be proceeded with departmentally......"

8. அனைத்தும் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு முடிவு செய்யப்படுகின்றது. நகராட்சி அனுமதியின்றி நகராட்சியால் அனுமதி மறுக்கப்பட்ட விதிகளை மீறி கட்டப்பட்ட கட்டிடங்களின் மீது மேலே குறிப்பிடப்பட்ட மாண்பமை உயர் நீதிமன்ற ஆணைகள் அடிப்படையில் விதிகளை பின்பற்றி தாமதமின்றி நடவடிக்கை எடுக்குமாறு ஆணையிடப்படுகிறது.

2019–ஆம் ஆண்டு, ஜூன் திங்கள், 21–ஆம் நாளன்று,என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு G. செந்தில் குமார்,
27/15, தேவிராஜ் இல்லம்,
நந்தவனம் – 2 வது தெரு,
போடி நாயக்கனூர்,
தேனி மாவட்டம்

2. நகராட்சி ஆணையர்,
போடிநாயக்கனூர் நகராட்சி,
போடிநாயக்கனூர்.

நகல்: முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி